FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301606

1. District : மாவட்டம் விழுப்புரம் PS: காவல்நிலையம் 20.தி.க.மார்க்கெட் Year: ஆண்டு 2026 FIR No.: மு.த.அ. எண் 08 Date: நாள் 06.07.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act. 1988. as amended Act. 2018. Sections பிரிவுகள்: 7 & 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 7 & 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 03.07.26 Date from : நாள் முதல் 16.00 Date to : நாள் வரை 22.30

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.07.26 Time நேரம் 08.00

(c) General Diary Reference ; Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் 08.30

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 45 கி.மீ. கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தேசிய நெடுஞ்சாலை புதிய கோதாரி அருகில்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இ.பழனையன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி ஆயத்த ஆடை அலகு, மாவட்ட அலுவலகம், மாவட்ட அலுவலகம் அருகில், விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள். (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. [illegible] 2) திரு. ராஜேஷ், உதவியாளர் 3) திரு. [illegible] உதவியாளர்கள் 4) திரு. சுடலைமுத்து, [illegible] 5) திரு. [illegible], [illegible] 6) திரு. [illegible], [illegible] 7) திரு. [illegible], [illegible] 8) திரு. அருண்குமார், [illegible] 10. திரு. [illegible] [illegible] உதவியாளர்கள்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

அய்யா,

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

6.7.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 06.07.26.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.07.26 - 09.45 hrs.

Name: பெயர் [illegible]
Rank: நிலை [illegible] No. எண் [illegible]

பணிந்து அனுப்பப்படுகிறது. ஐயா, நான் இன்று 06.07.2026-ம் தேதி காலை 08.00 மணியளவில், நிலைய அலுவலில் இருந்தபோது, கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.மூ.ப.முருகையன் என்பவர் கொடுத்த புகார் மனு மீது இன்று 06.07.2026-ம் தேதி காலை 08.30 மணிக்கு, விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 08/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர்:திரு.மூ.ப.முருகையன், ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம். ந.க.எண்.ஆகு1/359/2026,நாள் 06.07.2026. ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகம் - 03.07.2026 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:03.07.2026. ஐயா, திரு.மூ.ப.முருகையன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் 03.07.2026-ம் தேதி எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம், கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் குடிநீர் வரி, சொத்துவரி, காலிமனைக்கு வரிவிதிப்பு, தொழில் உரிமம், தொழில்வரி, பிளான் அப்ரூவல், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் ஆகியவற்றிற்காக இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த செல்வி.ந,ஈஸ்வரி, காவல் ஆய்வாளர், விழுப்புரம், அவர்களிடம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 16.00 மணியளவில் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி அலுவலகமானது, தெற்கு வடக்காக செல்லும் மகாத்மா காந்தி ரோட்டில் மேற்கு பாாத்தவாறு அமைந்துள்ளது. மேற்படி நகராட்சி அலுவலகம் தரைதளம் மற்றும் முதல் மாடி உடன் கூடிய கட்டிடமாக அமைந்துள்ளது. நகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே நுழையும் வாயிலில் வலது பக்கம் கோட்டகுப்பம் நகர்மன்ற தலைவர் திரு.S.S.ஜெயமூர்த்தி அவர்கள் அறையும் அதற்கு அடுத்த அறையாக நகராட்சி ஆணையர் திருமதி.துர்கா அவர்களது அறையும் உள்ளது. நகராட்சி ஆணையர் அலுவலக அறைக்கு பக்கத்தில் முதல் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகள் அமைந்துள்ளது. மேற்படி, நகர்மன்ற தலைவர்

மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் ஆஜரில் இல்லை. மேற்படி அலுவலகத்தில் வடக்கு திசையில் பொதுப்பிரிவு மேலாளர் அலுவலக அறை உள்ளது. கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் அலுவலகத்தினுள் சென்று பொதுப்பிரிவு மேலாளர் திரு.குமரவேல் அவர்களிடமும் மற்றும் அங்கிருந்தவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, மேற்படி பொதுப்பிரிவு மேலாளர் அலுவலக அறையில் உள்ளிருந்த திரு.குமரவேல் அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்து காட்டி பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் விசாரித்து தெரிந்த 1) திரு.குமரவேல், பொதுப்பிரிவு மேலாளர் அவர்கள் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரது அறையில் இருந்த 2) திரு.சிவக்குமார், வருவாய் ஆய்வாளர், 3)திரு.கிருஷ்ணவேல், துப்புரவு ஆய்வாளர், 4) முகேஷ்மேனன், இளநிலை உதவியாளர்/காசாளர், 5)திரு.ராஜேஷ், வருவாய் உதவியாளர், 6)திரு.தமிழ்ஒளி, வருவாய் உதவியாளர், 7)திரு.அபிபிரசன்னா, வெளிக்கொணர்வு மேலாளர் ஒப்பந்த ஊழியர், 8)திரு.தங்கராஜ், அலுவலக உதவியாளர், 9) திருமதி.சுபாஷினி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர், 10)திருமதி.ஜாகிதா பர்வீன், மேற்பார்வையாளர் (தூய்மை இந்தியா இயக்கம்),11) திருமதி.கோமதி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர், 12) செல்வி.கனிமொழி, பதிவறை எழுத்தர், 13) திருமதி.பாத்திமா பீவி, பரப்புரையாளர் (தூய்மை இந்தியா இயக்கம்) ஒப்பந்த ஊழியர்14) திருமதி.தீபா, பரப்புரையாளர் (தூய்மை இந்தியா இயக்கம்) ஒப்பந்த ஊழியர்,15) திருமதி.மேரி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர்,16)திருமதி.சரஸ்வதி, அலுவலக உதவியாளர், 17)திருமதி.லட்சுமி, தூய்மை பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர், 18) திருமதி.ஜோசர் அலின் மேரி, தூய்மை பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர், 19) திருமதி.நதியா, துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர் ஆகியோர்களை சோதனை செய்ததில் காணப்பட்ட விபரம் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.1) திரு.குமரவேல், பொதுப்பிரிவு மேலாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.2) திரு.சிவக்குமார், வருவாய் ஆய்வாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.3) திரு.கிருஷ்ணவேல், துப்புரவு ஆய்வாளர் என்பவரை சோதனை

செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.4) திரு.முகேஷ்மேனன், இளநிலை உதவியாளர்/காசாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.5) விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் திரு.ராஜேஷ், வருவாய் உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடமிருந்து ரூபாய்.13,800/-(500X26), (100X8) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவிதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் ரூ.300/ என பதிவிடப்பட்டு அவரது பெயருக்கு எதிரே கையொப்பம் இல்லாமல் இருந்தது. இது முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அதை பற்றி கேட்க அவர் எவ்வித விளக்கம் தெரிவிக்காததாலும் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6) திரு.தமிழ்ஒளி, வருவாய் உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து ரூபாய்.5,400/-(500X10), (200X2) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவிதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அவரது பெயருக்கு எதிரே எந்தவித பதிவும் கையொப்பமும் இல்லாமல் இருந்தது. இது முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அதை பற்றி கேட்க அவர் எவ்வித விளக்கம் தெரிவிக்காததாலும் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 7) திரு.அபிபிரசன்னா, வெளிக்கொணர்வு மேலாளர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.8) திரு.தங்கராஜ், அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.9) திருமதி.சுபாஷினி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து ரூபாய்.15,500/-(500X30), (200X1) (50X4) (20X4) (10X2) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவிதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அவரது பெயருக்கு எதிரே எந்தவித பதிவும் கையொப்பமும் இல்லாமல் இருந்தது. இது முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அதை பற்றி கேட்க அவர் எவ்வித விளக்கம் தெரிவிக்காததாலும் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 10) திருமதி.ஜாகீதா பர்வீன், மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர் (தூய்மை இந்தியா இயக்கம்) என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.11) திருமதி.கோமதி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை

செய்தபோது அவரிடமிருந்து ரூபாய்.1,000/-(500X2) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவிதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. எனவே, மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 12) செல்வி.கனிமொழி, பதிவறை எழுத்தர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை. 13) திருமதி.பாத்திமா பீவி, பரப்புரையாளர் ஒப்பந்த ஊழியர் (தூய்மை இந்தியா இயக்கம்) என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.14) திருமதி.தீபா, பரப்புரையாளர் ஒப்பந்த ஊழியர் (தூய்மை இந்தியா இயக்கம்) என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.15) திருமதி.மேரி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.16) திருமதி.சரஸ்வதி, அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.17) திருமதி.லட்சுமி, தூய்மை பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.18) திருமதி.ரோஜர் அலின் மேரி, தூய்மை பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.19) திருமதி.நதியா, தூய்மை பணி மேற்பார்வையாளர் ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடமிருந்து எந்தவித பணமும் கைப்பற்றப்படவில்லை.20) விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் உள்ள திரு.முகேஷ்மேனன், இளநிலை உதவியாளர்/காசாளர் அவரது அறையை சோதனை செய்தபோது அவரது மேஜையின் டிராவில் ரூபாய்.58,140/-(500X75), (200X62) (100X68) (50X15) (20X21) (10X27) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தனக்கு தெரியாது என்றும் அப்பணம் எப்படி வந்தது என்று தெரியாது என்று தெரிவித்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு, விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் இருந்த அலுவலக பணியாளர்களை பின்னர் விசாரித்து தெரிந்த கீழே கண்ட நபர்கள் ஆஜரில் இருந்தார்கள். 21) திரு.அண்ணாமலை, இளநிலை உதவியாளர், 22)திரு.ரவிக்குமார், நகராட்சி பொறியாளர், 23)திரு.ஸ்ரீதரன், வரைவாளர், 24) திரு.தமிழ்செல்வன், தொழில்நுட்ப உதவியாளர் ஒப்பந்த ஊழியர், 25)திரு.லோகேஷ்குமார், இளநிலை உதவியாளர், 26)திரு.அருண்ராஜ், ஓட்டுநர் ஒப்பந்த ஊழியர், 27) திருமதி.நதியா (எ) தமிழரசி, டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர் ஒப்பந்த ஊழியர், 28) திருமதி.காயத்ரி, அலுவலக உதவியாளர்,29) திருமதி.அருள்ஜோதி,

குழாய் பொருத்துநர் ஆகியோர்களையும் அவர்கள் அமர்ந்திருந்த இடத்தினையும் சோதனை செய்த போது காணப்பட்ட விபரம் கீழே கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.21) திரு.அண்ணாமலை, இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.22) திரு.ரவிக்குமார், நகராட்சி பொறியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,000/- (500 X 1) (200 X 1) (100 X 2) (50 X 2)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 23) திரு.ஸ்ரீதரன், வரைவாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.24) திரு.தமிழ்செல்வன், தொழில்நுட்ப உதவியாளர், ஒப்பந்த ஊழியர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.25) திரு.லோகேஷ்குமார், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.3,500/- (500 X 6) (200 X 2) (20 X 5) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவிதமான முகாந்திரமும் தெரிவிக்கவில்லை. மேலும், அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் தனிநபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்க அதில் 850/- இருந்தது. இது முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் அதை பற்றி கேட்க அவர் எவ்வித விளக்கம் தெரிவிக்காததாலும் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.26) திரு.அருண்ராஜ், ஓட்டுநர், ஒப்பந்த பணியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.27) திருமதி.நதியா (எ) தமிழரசி, டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர், ஒப்பந்த பணியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை.28) திருமதி.காயத்ரி, அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.2,200/- (500 X 4) (200 X 1) இருந்த அந்த தொகையை குறித்து விசாரிக்க, அவர் மேற்படி தொகைக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 29) திருமதி.அருள்ஜோதி, குழாய் பொருத்துநர் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,830/- (100 X 17) (50 X 2) (20 X 1)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கைப்பற்றப்பட்ட பணத்தின் விபரம்,

வ.எண்	கைப்பற்றப்பட்ட பணம்
1)	ரூ.13,800/-
2)	ரூ.5,400/-
3)	ரூ.15,500/-
4)	ரூ.1,000/-
5)	ரூ.58,140/-
6)	ரூ.1,000/-
7)	ரூ.3,500/-
8)	ரூ.2,200/-
9)	ரூ.1,830/-
ஆக மொத்தம்	**ரூ.1,02,370/-**

இந்த திடீராய்வின்போது, விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.1,02,370/-** (ரூபாய் ஒரு லட்சத்து இரண்டாயிரத்து முன்னூற்று எழுபது மட்டும்) ஆனது இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் விசாரணைக்காக விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்திலிருந்து 1) பொதுப்பிரிவு வருகைப் பதிவேடு-2026, 2) பொதுப்பிரிவு காலதாமத வருகைப்பதிவேடு-2026, 3) பொதுப்பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 4) வருவாய் பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 5) வருவாய் பிரிவு வருகைப்பதிவேடு-2026 6) வருவாய் பிரிவு காலதாமத வருகைப் பதிவேடு-2026 7) பொது சுகாதார பிரிவு வருகைப்பதிவேடு-2026 8) பொது சுகாதார பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு -2026 9) பொது சுகாதார பிரிவு காலதாமத வருகைப்பதிவேடு-2026, 10) பொறியாளர் பிரிவு

வருகைப்பதிவேடு-2026, 11) பொறியாளர் பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 12) பொறியாளர் பிரிவு காலதாமத வருகைப்பதிவேடு-2026, 13) தனிநபர் ரொக்கப்பதிவேடு-2026 ஆகியவற்றின் அசல்களை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த பொதுப்பிரிவு மேலாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் பெண் காவலர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல காவல் ஆய்வாளர் செல்வி.ஈஸ்வரி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 03.07.2026-ம் தேதி சுமார் 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 03.07.2026-ம் தேதி சுமார் 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட இலஞ்ச தொகை மற்றும் விழுப்புரம் கோட்டக்குப்பம் புதிய நகராட்சி அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத தொகையாக **ரூ.1,02,370/-** (ரூபாய் ஒரு லட்சத்து இரண்டாயிரத்து முன்னூற்று எழுபது மட்டும்) கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1.திரு.குமரவேல், பொதுப்பிரிவு மேலாளர், 2. திரு.ராஜேஷ், வருவாய் உதவியாளர், 3.திரு.தமிழ்ஒளி, வருவாய் உதவியாளர், 4. திருமதி.சுபாஷினி, தட்டச்சர் ஒப்பந்த ஊழியர், 5.திருமதி.கோமதி, தட்டச்சர், ஒப்பந்த ஊழியர், 6. திரு.ரவிக்குமார், நகராட்சி பொறியாளர், 7.திரு.லோகேஷ்குமார், இளநிலை உதவியாளர், 8. திருமதி.காயத்ரி, அலுவலக உதவியாளர், 9. திருமதி.அருள்ஜோதி, குழாய் பொருத்துநர், 10.திரு.முகேஷ்மேனன், இளநிலை உதவியாளர்/காசாளர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள sd xxxxxxx (M.P.Murugaian) ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர் .இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜர் நாள் .03.07.2026. 2.ரொக்கம்ரூ.1,02,370/- 3.28 நபர்களின் வாக்கு மூலங்கள். 4.பொதுப்பிரிவு வருகைப் பதிவேடு-2026, 5)பொதுப்பிரிவு

காலதாமத வருகைப்பதிவேடு-2026, 6) பொதுப்பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 7) வருவாய் பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 8) வருவாய் பிரிவு வருகைப்பதிவேடு-2026 9) வருவாய் பிரிவு காலதாமத வருகைப் பதிவேடு-2026 10) பொது சுகாதார பிரிவு வருகைப்பதிவேடு-2026 11) பொது சுகாதார பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு -2026 2) பொது சுகாதார பிரிவு காலதாமத வருகைப்பதிவேடு-2026, 13) பொறியாளர் பிரிவு வருகைப்பதிவேடு-2026, 14) பொறியாளர் பிரிவு நடப்பு குறிப்பு பதிவேடு-2026, 15) பொறியாளர் பிரிவு காலதாமத வருகைப்பதிவேடு-2026, 16) தனிநபர் ரொக்கப்பதிவேடு-2026.

ஐயா,

இன்று 06.07.2026-ஆம் தேதி காலை 08.30 மணிக்கு மேற்படி புகார் மனு மீது, விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 08/2026/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். ஒப்பம்.xxxx (ந.ஈஸ்வரி) காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் இரு துறை திடீர் கூட்டுசோதனையின் செயல்முறை ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

